00121

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்
சட்டக்கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் - 06

**LLU 6814 - தீங்கியல் சட்டம்**

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II 2023/2024
காலம் : ஒரு (01) மணித்தியாலம்

திகதி : 11.01.2025 நேரம்: பி.ப. 03.30 - பி.ப. 04.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை இரண்டு (02).
ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. நீச்சல் வீரன் ஒருவரான சுதத் ஹிக்கடுவையில் உள்ள புளுமூன் பீச் உணவகத்திற்கு வார இறுதியைக் கழிப்பதற்காக நண்பர்கள் குழுவுடன் சென்றான். அவர்கள் அனைவரும் அதிகளவில் மது அருந்தினர். இரவு வெகுநேரம் கழிந்திருந்தமையினால் கடற்கரைக்கு செல்லும் நுழைவாயில் மூடப்பட்டு இருந்தது. சுதத்தும் அவனது நண்பர்களும் பலவந்தமாக நுழைவாயிலை திறக்க முயற்சித்தனர். அப்பொழுது உணவகத்தின் பாதுகாப்பு அலுவலர்கள் நுழைவாயிலைத் திறக்கவேண்டாம் எனவும், கடலில் நீந்த வேண்டாம் எனவும், எச்சரித்தனர். சுதத்தும் அவனது நண்பர்களும் பாதுகாப்பு அதிகாரிகளுடைய எச்சரிக்கையை கவனத்தில் எடுக்காது நுழைவாயிலை பலவந்தமாகத் திறந்து கடற்கரைக்குச் சென்று நீந்த ஆரம்பித்தனர். அந்த சமயத்தில் கடல் கொந்தளிப்பாக இருந்தமையால் சுதத்துடைய தலை புளுமூன் பீச் உணவகத்தினால் கட்டப்பட்டிருந்த கடற்கரை சுவரில் மோதுண்டு அவன் நிரந்தரமாக பக்கவாதமுற்றான். இந்த சம்பவத்தை நேரில் கண்ட சுதத்துடைய நண்பனான சமன் கடுமையான அதிர்ச்சிக்குள்ளாகி அடிக்கடி பதற்றமடைவதுடன் இரவிலே பயங்கர கனவுளை காணுகின்ற அறிகுறிகளை விருத்தி செய்தான்.

   சுதத் மற்றும் சமன் ஆகியோர் தமக்கு ஏற்பட்ட ஊறுகளுக்கு நட்டஈடு கோரி புளுமூன் பீச் உணவகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானித்தனர்.

   பொருத்தமான தீங்கியல் பொறுப்பு எண்ணக்கருக்களின் அடிப்படையில் அவர்களுக்கு அறிவுறுத்துக. பொருத்தமான தீர்ப்புச்சட்டத்துடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

**(20 புள்ளிகள்)**

2. "தூய பொருளாதார நட்டங்கள் பண ரீதியான நட்டங்களில் இருந்து வேறுபடுவதால் அதனுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளுக்கு பதில் வழங்குகையில் நீதிமன்றங்கள் அடிக்கடி மட்டுப்பாடான அணுகுமுறையை பயன்படுத்துகின்றன."

   இலங்கை, தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் தூய பொருளாதார கொள்கை தொடர்பான நீதித்துறை அணுகுமுறையின் பின்னணியில் மேலே தரப்பட்ட கூற்றை நுணித்து ஆராய்க. உமது விடையை தீர்ப்புச்சட்டத்துடன் ஆராய்க.

(20 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -